DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 104/2017 |
| Deposition of Witness for | : | P.W. 2 |
| Name | : | **அப்துல் மஜித்** |
| Father's Name | : | **காசிம் முகம்மது** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | **65/2026** |

**(வழக்கின் எதிரி ஆஜர். )**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 10.02.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது இளையான்குடி குடியிருந்து வருகிறேன். வழக்கின் ஆஜர் எதிரியான அப்துல் காசிம் என்ற பீடா காசிம் என்பவரை எனக்கு தெரியும். அ.சா.1 சையது முகம்மது எனக்கு நண்பராவார். சுமார் 15 வருடங்களுக்கு முன்பு மதியம் சுமார் 1.00 மணியளவில் நான் பரமக்குடிக்கு வந்தபோது நஜீமுதீன் பெட்ரோல் பங்க் அருகே கூட்டமாக இருந்தது. அ.சா.1க்கு இடது பக்க தாடையில் காயம்பட்டிருந்தது. அ.சா.1க்கும் மற்றும் சில நபர்களுக்கும் இடையே சண்டை நடந்ததாக சொன்னார்கள். அந்த நபர்கள் யாரென்று எனக்கு தெரியாது. வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

போலிசார் இவ்வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள் என்றும் விசாரணையின் போது இவ்வழக்கு சம்பவத்தின்போது எதிரிகள் அ.சா.1 மற்றும் சாட்சி ஜாகீர் உசேன் என்பவரை முன்விரோதம் காரணமாக தாக்கி காயப்படுத்தினார் என்றும் காயம்பட்ட அ.சா1 ஐ நான் காவல்நிலையத்திற்கு அழைத்து வந்து நான் புகார் கொடுக்க உதவினேன் என்றும் வழக்கு சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்று போலிசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டதால் வேண்டுமென்றே வழக்கு சம்பவத்தை மறைத்து அவர்களுக் சாதகமாக பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**: இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.10 14:20:51 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**